


# போர்வாள்


திராவிடர் வார வெளியீடு

ஆசிரியர்கள்: காஞ்சி.மணிமொழியார், மா.இளஞ்செழியன்

திருவள்ளுவர் ஆண்டு 1979 கார்த்திகை 5
சென்னை, 20—11—48

வீச்சு 13


"சொல்லின் செல்வர் புலவர் R. P. சேதுப்பிள்ளை அவர்கள் சென்னை பிரசிடென்சி கல்லூரி தமிழ்ச் சங்கத்தில் பேசுகையில் நாற்றமடிக்கும் சென்னை குழாய்த் தண்ணீர்போல் இருக்கிறது சென்னை சர்க்கார் நிர்வாகம் என்பதை வருத்தத்துடன் குறிப்பிட்டார்."

—பத்திரிகைச் செய்தி


நாடு $1\frac{1}{2}$ அணா.
ண்டு சந்தா ரூ. 5

வெளிநாடு 2 அணா.
ஆண்டு சந்தா ரூ. $6\frac{1}{4}$

# ஆரியராவது திராவிடராவது!

(மயிலைநாதர்)

தமக்கு பத்திரிகைகள், ரேடியோக்கள், சினிமாக்கள், நாடகங்கள் இவைகளின் ஒருமித்த பிரசார பலமும், கீழ்ப்பாக்கம், மவுண்ட்ரோடு இவைகளின் பொருளாதார உதவியும், ஊராளும் உத்தமர்களின் போராதரவும் இருக்கின்றனவென்ற காரணத்தால், எச். ஜி. வெல்ஸ், முகர்ஜி போன்ற சரித்திராசிரியர்கள், கால்டுவெல் போன்ற மேனாட்டறிஞர்கள், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை போன்ற தமிழ்ப் பெரியார்கள், தாகூர்போன்ற வடநாட்டறிஞர்கள், விவேகானந்தர் போன்ற தத்துவக் கலைஞர்கள், பண்டித நேரு போன்ற அரசியல் தலைவர்கள் ஆகிய இவர்களனைவரும் கண்ட ஆரிய—திராவிட வரலாற்றுண்மைகளை அடியோடு மறக்குமளவுக்குத் துணிவு கொண்டு "ஆரியராவது திராவிடராவது" என வெட்டிவேதாந்தம் பேசும் சில வீணர்களை, மயிலாப்பூர் மாம்பல அடிமைகள் என்பதா? கலியுக விபீஷணர்கள் என்பதா? கைக்கூலிக்காகக் காதை பாடிடும் கம்பதாசர்கள் என்பதா? என்னென்று கூறுவது?

இத்தகையோரின் கூற்றுக்கு ஆயிரமாயிரம் மறுப்புக்களும், விளக்கங்களும் நமது தலைவர்களாலும் பிறராலும் அவ்வப்போது தரப்பட்டிருக்கின்றன என்றாலும் இவர்களின் புரையோடிய புத்தறிவு தெளிவடையக் காணோம். எனவே இவர்களின் கவனத்திற்கு மீண்டும் ஒரு செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறோம், அவர்களின் பித்தம் தெளிய அது பயன்படட்டும் எனக் கருதி.

கடந்த 11-11-48ந் தேதி "இந்து" பத்திரிகையில் "வேலாயுதம் கொலை வழக்கு" சம்பந்தமாக ஒரு செய்தி வெளிவந்தது. அதாவது "தாதானூரைச் சார்ந்த ஸ்ரீமான் எஸ். எ. வைத்தினாத அயயருக்கு இன்று ஜாமீனில் வெளிவர அனுமதியளிக்கப்பட்டது" "......Granted bail today to Mr. S. A. Vaidyanatha Aiyar of Tathanur" என்பதாகும்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறோம் என்றால் ஒருவரைக் கொலை செய்யக் காரணமாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு சர்க்காரின் சந்தேகத்திற்காளான ஆரியர் ஒருவருக்கு "இந்து" கொடுக்கும் மரியாதை "Mr." அதாவது ஸ்ரீமான். என்ற பட்டம்! குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த எந்தத் திராவிடருக்கும், ஏன், நகைச்சுவை அரசர் N. S. K, எம். கே. டி. பாகவதர் இவர்களுக்குக்கூட கொடுக்கப்படாத அந்த "Mr." மரியாதையை ஆரிய "இந்து" தமது இனத்தவரான வைத்தியனாத அய்யருக்குமட்டும் அளித்துள்ளது!

இதிலுள்ள "விநோதம்" என்னவெனில் .கோரக் கொலைக்கு ஆளான கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு வைத்தியநாத அய்யருக்கு ஆரிய "ஹிந்து" வால் கொடுக்கப்பட்டுள்ள "Mr." மரியாதை கொலையுண்டுபோன சீர்திருத்த செம்மல்—இளைஞர் ஏறு-வீரத் திராவிடர் ஆசிரியர் வேலாயுதம் அவர்களுக்கு அளிக்கப்படாததுதான். நாம் இதனை இட்டுக் கட்டிக் கூறவில்லை. "இந்து" வையே பேசவைக்கிறோம் கேளுங்கள்: "They are alleged to have Conspired and committed the murder of Velayudha Padayachi" பார்த்தீர்களா "Mr." அற்ற வெறும் வேலாயுதத்தை! ஆரிய "இந்து" பத்திரிகை, குற்றவாளியெனக் கருதப்படும் ஒரு ஆரியருக்கு "Mr" மரியாதையினைத் தந்துள்ளது. ஆனால் கொலைக்கு ஆளான ஒரு திராவிடருக்கு அத்தகைய மரியாதையை அளிக்கவில்லை. காரணம் ஹிந்து இதழின் ஆரிய பாசமும் திராவிடத்துவேஷமும் தான் என்பதைத் தவிர வேறு காரணத்தை யார்தான் எப்படிக் கூறமுடியும்?

இந்தச் செய்தி நமக்கு ஏன் இவ்வளவு ஆத்திரத்தைத் தருகிறதென்றால் ஒரு சாதாரண அநாமதேய ஆரியருக்குக் கொடுக்கப்படும் மரியாதைகூட ஒரு ஆசிரியருக்கு, அதிலும் நல்ல படிப்பாளிக்கு, அதிலும் சிறந்த ஒழுக்கமுடையவருக்கு, அதிலும் தேர்ந்த தமிழ்ப் புலவருக்கு, அதுவும் ஊரிலேயும் உலகத்திலேயும் காணப்பட்ட ஊழல்களை தன் உயிருக்கும் அஞ்சாது எடுத்துக்காட்டி, அதன் காரணமாகவே தன் வாழ்வை இழந்த ஓர் வீர இளைஞருக்கு அளிக்கப்படவில்லையே என்பதால்தான். ஆசிரியர் வேலாயுதம் அவர்கள் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்திற்காக இவ்வளவு தகுதிகளும் இருக்கலாம் என்று நாம் யூகிப்பதாகவோ, இட்டுக் கட்டிக் கூறுவதாகவோ யாரும் கருதத் தேவையில்லை. ஆசிரியர் வேலாயுதத்தின் உய[ர்] பண்பு குறித்த இந்தச் சேதியும் "இந்து" விலேயே காணப்படுவதுதான். 8-11-48ல் வெளிவந்த அதே இந்து இதழில் பிரசுரமான வாசகங்கள் பின் வ[ரு]

# திராவிட முஸ்லிம்களின் சிந்தனைக்கு!

“தென்னாட்டு முஸ்லிம்கள் மதத்தில் இஸ்லாமியர் இனத்தில் திராவிடர்! எனவே திராவிடர் கழகத்தில் இஸ்லாமியத் தமிழரெல்லாம் ஈடுபடவேண்டும்.

“இன்றைய இந்திய நிலையில் இஸ்லாமியருக்கு இதுபோது ஈ. வே. ரா. தலைமையே வேண்டுவதாகும். நாயக்கர் நாஸ்திகம் பேசுகிறார் என்று நாத்தழும்பேற நவின்று வரும் நம்மனோரை நம்பியதனால்தான் நாம் நட்டாற்றில் விடப்பட்டோம், இனியும் அந்த அசட்டுப் பேர்வழிகளின் ஆசை வார்த்தைகளை நம்பி அதோகதியடையமாட்டோம்.

“அன்றுமுதல் இன்றுவரை தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்காகப் பரிந்துபேசி வருபவர்களும் அன்னாருடன் ஒத்துழைத்து ஒத்தாசை செய்துவருபவர்களும் அந்த சுயமரியாதை சகோதரர்கள்தான். தென்னாட்டு முஸ்லிம்களுக்கு இனியும் ஒத்தாசையும், உதவியும் செய்துவர வேண்டியவர்களும் அந்த சுயமரியாதை இயக்கத் தோழர்கள்தான்.

“நம்மை கதர் வாலாக்கள்“ ஐந்தாம் படைகள்” என்று அறைந்தபோது நம்மை அரவணைத்தவர்கள் யார்? நம்மை “தேசத்துரோகிகள்” என்று தேசிய ஏடுகள் தீட்டியபோது நமக்குப் பரிந்து பேசியவர்கள் யார்? நம் தலைவர்களை தான்றோன்றித்தனமாய்த் திட்டியவர்களுக்குத் தக்க வாயாப்புக் கொடுத்தவர்கள் யார்? அவர்கள்தான் அந்த தீரமிக்க சுயமரியாதை தோழர்கள்!

“இப்படிப்பட்ட நம் இந்தியத் தோழர்களுடன் உறவு பூணுவதனால் நாம் உருப்படாது ஒழிந்துவிடுவோமென உதவாக் கரைகள் சிலர் ஊளையிடுகிறார்கள். அந்த ஊளையை, நரியின் ஊளையென ஒதுக்கித்தள்ளிவிட்டு உண்மைக் கட்சியில் நாமெல்லாம் ஒருமிக்க சேர்வோமாக!

“நமக்காகப் பேச நாதியற்றிருக்கும் நம் இன்றைய நிலையில் நமக்காகப் பரிந்துபேசி நம்மோடு தோளோடு தோள் நின்று ஒத்துழைத்துவரும் ஒரு இயக்கத்தோடு சேரலாகாதென செப்பும் சிறுமதியாளர்கள் சுயநலமிகள்! சுத்த சோம்பேறிகள்!

“அவர் கடவுள் இல்லையென்று கூறுகிறாராம். கடவுளுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தமோ அந்த சம்பந்தம்தான் கடவுளுக்கும் அரசியலுக்கும்.

“ராமசாமிப் பெரியார் நாஸ்திகராயிருந்தாலென்ன? ஆஸ்திகர்கள் செய்ய முடியாத நல்ல வேலையை அவர் செய்கிறார். அதற்காக அவர் இயக்கத்தில் தென்னாட்டு முஸ்லிம்கள் சேரப்போகின்றனர். சேர்ந்து திராவிடர் உரிமையை நிலை நாட்டுவர்.

“இந்தியா மத சம்பந்தமற்ற நாடு எனக்கூறப்படுகையில் தென்னாட்டு முஸ்லிம்கள் திராவிடர் கழகத்தில் சேர்ந்து உழைப்பதனால் பாதகமொன்றுமில்லையல்லவா? தென்னாட்டு முஸ்லிம்களுக்கு கதிமோட்சம் வேண்டுமாயின் திராவிட இயக்கத்தில் சேரவேண்டும். இதுவன்றி வேறு வழியில்லை. தங்கள் நலனுக்காகவேதான் தமிழ் முஸ்லிம்கள் பிரஸ்தாப இயக்கத்தில் சேர்கிறார்கள்.

“தென்னாட்டு முஸ்லிம் தலைவர்கள் பேசினால் நா அறுபட்டுவிடும்; மூச்சுவிட்டால் மூக்கறுபட்டுவிடும் என்று ஒளித்துக்கொண்டிருக்கையில், பெரியார் இடி முழக்கம் செய்கிறார். காரணமென்ன? அவர் உண்மையைச்சொல்லப் பின்வாங்குவதில்லை. உண்மையை உரைக்க உள்ளத்தில் உறுதியில்லாத நமது தலைவர்களை வைத்துக்கொண்டு கட்டியழுவதைவிட நமது உண்மை நிலையை எடுத்தியம்பத்தக்க தலைவரை தெரிந்துகொள்வதில் பிழையென்ன?

“பெரியார் ஈ. வே. ரா.வை யாரும் மதத் தலைவராகக் கொள்ளச் சொன்னால் ஆட்சேபிக்க வேண்டியதுதான். அவரை அரசியல் தலைவராக ஏற்க யாருக்கும் ஆட்சேபனையில்லையல்லவா?”

கொழும்பிலிருந்து வெளிவரும் **இஸ்லாமியத் தாரகை** என்னும் தமிழ்க் கிழமை ஏடு 22-10-48ல் வெளியான அதன் இதழில் இதுபோலத் தலையங்கம் தீட்டியிருக்கிறது. இது, திராவிட முஸ்லிம்களின் சிந்தனைக்கு! தென்னாட்டு முஸ்லிம்கள் ‘**இஸ்லாமியத் தாரகை**’யின் ஆய்வுரையை நன்கெண்ணிப் பார்த்து நல்லதோர் முடிவுக்கு வருவாராக!

---

மாறு: “........though he was only an elementary School teacher he was an educated and cultured. man. He had passed the Vidwan exam.”

தவிர இந்த வழக்கிற்கு ஆரியப் பத்திரிகைகள் கொடுத்து வரும் தலைப்பு “உடையார் பாளையம் கொலை வழக்கு” என்பதாகும். “வேலாயுதம் கொலை வழக்கு” என்று தலைப்பு கொடுத்தால் கோட்சே போல பெரிய மனிதராகிவிடுவர் இந்த திராவிடர்களும் என்பது இந்த ஆரிய ஏடுகளின் எண்ணம் போலும்! கோட்சேவைக் குலதெய்வமாகவே வைத்து வட நாட்டில் வழிபாடுசெய்கின்றனர் பலவேத வேதியர்களும் இந்து மத வெறியர்களும் என்பதை ப்ளிட்ஸ், ...ார்ச் போன்ற வடநாட்டு இதழ்களிலிருந்தே அறிகின்ற நமக்கு இந்த “ஹிந்து” பத்திரிகையின் ஆரியப்பித்து எத்தகைய ...யப்புணர்ச்சியையும் ஊட்டாத...ல் என்ன வியப்பிருக்கிறது? ...படி இருக்கமுடியும்? ஆரி...ர் என்பதற்காக உயர்த்து...துப், திராவிடர் என்பதற்கா...க் தாழ்த்துவதும்தானே ஆரி...தம் பிறவிக்குணம்? ஆகவே ...ந்துவின் செயல் நமக்குச் சிறி...ம் வியப்பூட்டவில்லை. ஆனால் ...ரியராவது திராவிடராவது ...ன்று உரக்கக் கூவும் நாமக்கல் ...ர்கள் சிலர் தமிழகத்தில் ...ந்த நாளிலும் உலவுகிறார்களே ...பதுதான் நமக்குப் பெரு...ப்பைத் தருகிறது!

போர்வாள்

20—11—48 சனிக்கிழமை

# அம்பேத்கார் தயாரித்த அவியல்!

நீண்டகால உறக்கத்திற்குப் பிறகு டில்லியில் உள்ள அரசியல் ஆக்க மன்றம் சென்ற திங்கள் கண்விழித்தெழுந்து கடனாற்றத் தொடங்கி இருக்கிறது. அந்த மன்றம் உருவாக்கப்பட்டதே இந்தியாவின் வருங்கால அரசியல் எவ்வண்ணம் இருத்தல்வேண்டும் என்பதைச் சித்தரிப்பதற்குத்தான். ஆனால், மன்றம், அந்தப் பணியை, அது தோன்றி வளர்ந்த இந்தப் பதினெட்டு மாத காலத்திற்குப் பிறகு இப்போதுதான் முதல் முதலாக, தொடங்கி இருக்கிறது. பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து இந்தியா விடுதலை பெற்று ஓர் ஆண்டும் மூன்று மாதங்களும் ஆகின்றன. இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டம் இப்போதுதான் மன்ற உறுப்பினர்களால் நிதானமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது! இந்த ஆராய்ச்சி முடிந்து, உரையாடல்களும் குறுக்கு வெட்டுப் பேச்சுகளும் கிண்டல்கேலி நிகழ்ச்சிகளும் ஒருவாறு ஓய்வுபெற்று, இப்போது மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த நகல் திட்டத்தின் மீது மன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள 3000 திருத்தங்களும் ஆலோசிக்கப்பட்டு, சட்டம் அசல் சட்டமாக மாறுவதற்குள் மேலும் ஓர் ஆண்டு கழிந்துபோனாலும் போகும்! அவ்வளவு ஆமை வேகத்தில் இந்திய அரசியல் உருவாகிக் கொண்டிருக்கிறது! நெடுநாள் அரசியல் போராட்டத்திற்குப் பிறகு விடுதலை பெற்றுள்ள ஒரு 'நாடு' தன் வருங்கால அரசியல் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான திட்டத்தை உடனடியாக வகுத்துவிட்டு மடமடவென விடுதலைப் பாதையில் முன்னேற்றபுரி நோக்கி அரசியல் பயணம் தொடங்கிவிடுவதுதான் முறை. ஆனால் இந்தியாவோ, விடுதலைபுரிக்குள் நுழைந்து, வெற்றி விழாக் கொண்டாடி, "தேசீயக்" கொடி ஏற்றி, 18 மாதங்கள் ஆன பிறகும்கூட, அரசியல் சட்டத்தை ஆலோசிக்கும் நிலையிலேயேதான் இருக்கின்றது! இந்நிலை மிக மிக வெட்ககரமானது மட்டுமல்ல துக்ககரமானதுகூட!

சட்ட நிபுணர் அம்பெத்கார் திட்ட வட்டமாக ஓர் நகல் அரசியல் திட்டத்தைத் தந்திருக்கிறார், அரசியல் ஆக்க மன்றம் ஆலோசித்துப் பார்ப்பதற்காக! அதுதான் இதுபோது மன்ற உறுப்பினர்களால் அலசிப் பார்த்து ஆராயப்பட்டு வரும் இந்திய அரசியல் நகல் திட்டம் என்பது! மன்ற உறுப்பினர் ஒருவர் கூறியது போல, அம்பெத்கார் திட்டம் ஓர் அவியல்! அமெரிக்கத் திட்டத்திலே கொஞ்சம், ஆப்பிரிக்கத் திட்டத்திலே ஒரு துண்டு, ஆஸ்திரேலியா திட்டத்திலே ஒரு பகுதி, ஸ்விட்சர்லாந்து திட்டத்தில் ஒரு துளி என்று இவ்வண்ணம் பற்பல நாட்டுத் திட்டங்களினின்று ஒவ்வொரு பகுதியை இரவல் பெற்று, அனைத்தையும், அவசியம் எனும் வாணலில் இட்டு, கூட்டிப்பிசைந்து ஓர் அரசியல் அவியலைத் தயாரித்திருக்கிறார் டாக்டர் அம்பேத்கார்! சட்டைக்குத் தேவையான கைப்பகுதி, கோட்டுக்குத் தேவையான 'பாக்கெட்', காற்சட்டைக்குத் தேவையான உடற் பகுதி, புஷ் கோட்டுக்குத் தேவையான துண்டு துக்கடாக்கள், பூட்சுக்குத் தேவையான நாடா, செருப்புக்குத் தேவையான தோல், இவ்வளவையும் ஒன்று சேர்த்து தையல் போட்டு ஓர் உடை தயாரித்தால் அந்த உடை எவ்வளவு நவீனமானதாகவும் நகைத்தற்குரியதாகவும் இருக்குமோ அப்படியிருக்கிறது அம்பேத்கார் அளித்துள்ள திட்டம்!

இந்திய உபகண்டத்தின் தனிப்பட்ட சிறப்புகள் யாவை, இங்கே வாழ்கின்ற பல்வேறு இனங்களின் இலட்சியங்கள் என்ன, வர்க்கத்துக்கோர் வட்டாரம் என்ற அடிப்படையில் இத் துணைக் கண்டம் எங்கணும் எழுந்துள்ள இன எழுச்சி இயக்கங்களின் உட்கிடக்கை எத்தன்மைத்தது, என்னும் இவைபோன்ற முக்கியமான கருத்துகளை இந்த திட்டத்தைத் தயாரித்தவர்கள் எண்ணிப் பார்த்ததாகவே தெரியவில்லை. திராவிட நாட்டுப் பிரிவினை போன்ற உன்னத இலட்சியங்களுக்கு இந்த திட்டத்தில் சிறிதும் இடம் இல்லை! இந்த உப கண்டத்துக்கு ஏற்ற திட்டம் எது என்பதைச் சிறிதும் எண்ணிப் பாராது பற்பல நாட்டுத் திட்டங்களை ஒட்டு வேலை செய்திருக்கும் ஜால வித்தை எப்படி பல்வேறுபட்ட இந்திய இனங்களின் அரசியல் பசியைத் தணிக்கும் என்பதைத்தான் நம்மால் சிறிதும் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

இந்தத் திட்டத்தின் மிகப் பெரியதும் மிக முக்கியமானதுமான குறைபாடு, இந்தியாவின் எந்தப் பகுதியும், அது எவ்வளவுதான் விரும்பினாலும் டில்லி மத்திய சர்க்காரை விட்டுப் பிரிந்து தனி அரசு அமைத்து தனி ஆட்சி செலுத்தவே முடியாது இச்சட்டப்படி! இந்தியா, பல்வேறு நாடுகளின் தொகுப்பு. எனவே இந்தியத் துணைக்கண்டத்திற் கென்று வகுக்கப்படும் எதிர்கால அரசியல் திட்டம் எதுவும் இந்தப் பல்வேறு நாடுகளின் எண்ணங்களையும் கொள்கை கோட்பாடுகளையும் அந்த நாடுகளில் அலைமோதிக் கொண்டிருக்கும் இயக்கங்களையும் அவற்றின் நிகழ்கால எதிர்கால விளைவுகளையும் ஆரத்தீர எண்ணிப் பார்த்து எழுதப்படவேண்டும். அதோடு, இந்தியா என்று அழைக்கப்படும் இந்த நிலப் பகுதியில் உள்ள எந்த நாடாவது— வங்காளமோ மஹாராஷ்டிரமோ அசாமோ திராவிடமோ, இந்தியா என்ற பொது அமைப்பிலிருந்து எதிர்காலத்தில் எப்போதாவது பிரிந்துபோக விரும்பினால் அப்படிப் பிரிந்துபோகும் உரிமை உண்டு என்பது அரசியல் சட்டத்தில் அழுத்தந் திருத்தமாக குறிப்பிடப்பட வேண்டும், அப்போதுதான் எந் நாடும்—இந்த நாடுகளை மாகாணங்கள் என்று பிரி

(11-ம் பக்கம் பார்க்க)

# யாதும் ஊரே யாவரும் கேளிர்!

"ஏன் ஓய் சாஸ்திரியவாள் என்னதான் இருந்தாலும் காலம் இப்படியா கெட்டுப்போகணும்ங்கறேன்! மூணு வருஷத்துக்கொருதரம் மூணு சொட்டு மழை பெயறது, பயிர் பச்சையோ கருகிப்போய் ஒரே சாம்பலா கிடக்கிறது, அரிசி விலையோ ரூபாய்க்கு 1½ ஆழாக்குங்கறான்! நேத்து முளைத்த முளைகளெல்லாம் மூஞ்சிலே மூக்குக் கண்ணாடியை மாட்டிண்டு திரியறதுகள்! பத்து வயசு சிசுக்களை அதட்டினாக்கே அதுக நம்மைத் திருப்பி அடிக்க வந்துடறதுகள்! இந்த ஸ்திரீகள் தர்பாரோ சஹிக்கவே மாட்டங்கிறது! எல்லாம் ஒரே ஹோம் ரூல்தான்! அவா இட்டது சட்டம் அவா பேசறது தர்மம்ன்னு இருக்கு! போதாத கொறைக்கு பொன்னியம்மா கொறைன்னு சொல்றாளே அது மாதிரி-இந்த அழகிலே அவாளுக்கு சொத்துரிமை மசோதா வேறே வந்துண்டிருக்கு! நீச ஜென்மங்களை அல்லாம் பகவான் சந்நிதியிலே வேறே விட்டாச்சு! காலம் ரொம்ப கெட்டுப் போச்சு ஓய் காலம் ரொம்போ கெட்டுப் போச்சு!"

"குளத்தங்கரை கான்பரன்"சிலே சுப்பண்ணய்யங்கார் இந்தத் தீர்மானத்தைப் பிரரேபிக்கிறார், உடனே அதை ஆமோதிக்க முன்வருகிறார் அண்டப் பிரசண்ட அதிபயங்கர சர்வக்ஞான பிரசண்ட மாருத பூஷணம் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரியவாள்! [ஆநந்த விகடன் தமிழ்!] தீர்மானம் ஏகமனதாக நிறைவேறுகிறது! ஹரிசர்வோத்தம சர்மா கடைசியில் "வாசாமகோசரமாக" உபந்யாசம் புரிகிறார் தீர்மானத்தின் "இலக்ஷண சுத்தத்"தைப் பாராட்டி! இடையிலே சந்திரராமதீக்ஷிதர் சஹஸ்ரநாம அர்ச்சனை புரிகிறார் அந்த "நாசமாப்போற இராமசாமி நாய்க்க"னுக்கு! "மெள்ள சொல்றேளே, மஹா சண்டாளன்னோ அந்தப் பாபிஷ்டன்! அந்த ராக்ஷசனாலே இல்ல ஓய் இந்த சூத்திரப் பயல்கள் தலை கால் தெரியாம துள்ளுதுகள்! பகு தர்மிஷ்டாளாக இருந்த சூத்திராளை நாஸ்திகம் பண்ணிப் போட்டானே பாவி!" என்று மாநாட்டுக்கு வந்தனோபசாரம் கூறுகிறார் வேதபோதகர் வரதராஜஸ்வாமிகள்! மாநாடு இந்த வாழ்த்துரையோடு "சர்வ சம்பிரமமாக" முடிகிறது!

எங்கே எப்போது எதற்காக இந்த மாநாடு கூடிற்று என்று கேட்கிறீர்களா? எல்லா ஊரிலும்தான் கூடுகிறது! அடிக்கடி! ப்ராமண குல புராதன தர்மத்தைக் காப்பாற்ற!

வர வர காலம் கெட்டுப் போச்சு என்று ஒரு சர்மா ஆரம்பித்துப் பேசுவதும், ஆமாம் அது மெய்தானே என்று ஒரு சாஸ்திரி ஆமாம் போடுவதும், அஹா! அந்தக் காலம் இப்படியா இருந்தது என்று ஒரு தீக்ஷிதர் ஹாஹாகாரம் செய்வதும், [அது என்ன காரம் பச்சை மிளகாயின் காரமா என்று கேட்டுவிடப் போகிறீர்கள், "கல்கி" ஆசிரியருக்குக் கோபம் வந்துவிடும், அவருடைய அருமைக்கூட்டத்தாரின் அருமைவடமொழியில் மகிழ்ச்சிக்கடலில் நீந்தினர் என்று பொருள் அதற்கு] அந்த ஆஹாகாரத்தின் அற்புதசுரமேன்மையைப்பற்றி ஒரு [illegible] கருத்துரை மொழிவதும், அந்த கருத்துரையிலே இருக்கும் வேதஞானப் பொருள் இது என்று எடுத்துக் காட்டிட ஆச்சாரியார் ஒருவர் தயார் கூறுவதும் காலம் கெட்டதற்கெல்லாம் மூல புருஷன் "அந்த நாய்க்கன்தான்" என்று மாநாடு ஏகமனதாகத் தீர்மானிப்பதும் எங்கோ எப்போதோ நடைபெறும் ஓர் அபூர்வ சம்பவமல்ல! நாள்தோறும் நாலாறுபத்து சர்மாக்களோ சாஸ்திரிகளோ தீக்ஷிதர்களோ அய்யர்களோ அய்யங்கார்களோ கூடுகிற ஒவ்வோர் இடத்திலும் நடைபெறுகிற நித்திய நிகழ்ச்சி!

இந்த "சூனாமானாக்கள்" இல்லாத காலத்திலே மாதம் மும்மாரி பெய்தது, பயிர் செழித்து வளர்ந்தது, வருஷம் முப்போகம் விளைந்தது, தர்மம் "நாலு காலால்" நடந்தது, இன்பம் எங்கும் குடிகொண்டிருந்தது, பசி தலைகாட்டியதே இல்லை, பஞ்சம் ஏற்பட்டதே கிடையாது என்றெல்லாம் அந்த மாநாடுகளிலே விரிவுரை ஆற்றப்படும். "அந்தக்"காலம் சிறப்பாக இருந்தது என்றும் "இந்தக்" காலம் அடியோடு கெட்டுவிட்டது என்றும் அந்த மாநாடுகள் ஒவ்வொன்றிலும் ஏகமனதாக முடிவு செய்யப்படும். இந்தக் காலம் இப்படி ஆனமைக்குக் காரணம் எல்லாம் "இந்தப் பாழாய்ப் போன சுயமரியாதைக்காரா"தான் என்றும் அந்த மாநாடுகளிலே திட்டவட்டமாகக் கூறப்படும்.

காலம் கெட்டுவிட்டது என்று அவர்கள் கூறுகின்றார்களே அவர்களுடைய "ஸ்பெஷல் கான்பரன்சு"களிலே, அது முற்றிலும் தவறு என்று யாரும் கூறிவிடமுடியாது. ஏனெனில் அவர்களைப் பொறுத்தவரை காலம் கெட்டுத்தான் போய்விட்டது! உண்மையிலேயே அவர்கள் பாராட்டிப் பேசுகிற அந்தக் காலத்திலே அவர்களுக்கு இருந்த சுகபோகங்கள், வசதிகள், சௌகரியங்கள், அவர்கள் இழித்துப் பேசுகிற இந்தக் காலத்திலே கிடையாது!

அந்தக் காலத்திலே, மன்னர்கள், அவர்களின் கைப்பொம்மைகள்! மக்களுக்கோ அவர்கள் தேவர்கள்! ஆகவே செல்வமும் செல்வாக்கும் அவர்கட்கு அபாரம்!

அந்தக் காலத்திலே, அவர்கள் பூதேவர்கள். பூசுரர்கள், இறைவன் திரு அவதாரங்கள், பிரமன் முகத்திலே யிருந்து பிறந்தவர்கள்! ஆகவே அவர்கள் எவருக்கும் பணிவதில்லை, ஆனால் எவரும் அவர்கட்குப் பணிந்து கிடந்தனர்!

அந்தக் காலத்திலே அவர்களின் சுட்டு விரல் அசைந்தால் நாடு அதிரும், நாட்டிலே உள்ள மக்கள் அதிர்வர், மக்களை ஆட்டிப் படைக்கும் மண்டலாதிபதிகளும் அதிர்ந்து நடுங்குவர்.

அந்தக் காலத்திலே அவர்களுடைய கையிலே இருந்த உலர்ந்த புல் மன்னன் கரத்திலே இருந்த வலிய வாளினும் வன்மை மிக்கது! அவர்களுடைய கக்கத்திலே இடுக்குண்டு கிடந்த பஞ்சாங்கம், மன்னனின் பாசறையிலே தவழ்ந்து கிடந்த போர்க்கருவிகளைவிட பலம் மிக்கது, பலன் தருவது, பயம் அறியாதது!

**அந்தக் காலத்திலே,** எவரும், இந்தக் காலத்தைப் போல அவர்கள் ஏன் மேல்சாதி நாங்கள் ஏன் கீழ் சாதி என்று கேட்க முடியாது! அவர்களுக்கு மட்டும் ஏன் தான தருமங்கள், சுக போக வசதிகள், மன்னனின் நன்கொடைப் பட்டியல்கள் எங்களுக்கு ஏன் அவை கிடையா என்று புரட்சிக்குரல் எழுப்ப முடியாது!

**அந்தக் காலத்திலே,** அவர்கள் அநுபவித்த நிலங்களுக்கு வரி கிடையாது—வரியிலி வரி இல்லாதது என்று பெயர் அந்த நிலங்களுக்கு!

**அந்தக் காலத்திலே,** மன்னர்கள் அவர்களுக்கு ஆயிரக் கணக்கான வேலி நிலங்களை "இந் நிலங்களை வைத்துப் போற்றி வேதம் ஓதுமின்" என்று சொல்லி இலவசமாகத் தானம் அளித்து வந்தான்—அவற்றிற்குப் பெயர் நான் மறை நிலங்கள்! அதாவது நான்கு வேதங்கள் ஓதப்படுவதற்காக தானம் தரப்பட்ட நிலங்கள்!

**அந்தக் காலத்திலே,** கம்ப நாட்டாழ்வார்கள் இந்நாளிற்போல இரண்டொருவரல்ல, ஏராளமாக இருந்தனர் அந்தப் பூசுரர்கள் இசைத்ததை இசைக்க! சொன்னதைச் செய்யுளிற் பாட! அவர்கள் காலால் இட்ட கட்டளையைத் தம் தலையால் நிறைவேற்ற!

**அந்தக் காலம்** அவர்களுடைய காலம்! அவர்களுடைய ஏகபோக ஆதிக்கம் அப்பு அழுக்கின்றி நிறைவேறிவந்த காலம்! மக்கள் அவர்களுடைய மந்திரங்களிலே-மாய தந்திரங்களிலே, அவர்கள் செய்துவந்த சடங்குகளிலே பொய் புனை சாத்திர சழக்குகளிலே மயங்கிக் கிடந்த காலம்! தமிழகம் ஆரிய மாயையிலே கட்டுண்டு கிடந்த காலம்! எந்த நாட்டிலிருந்தோ வந்த ஆரியருக்கு இந்த நம் நாட்டிலே ஏன் இத்தனை சுகபோகம் என்று தட்டிக் கேட்கும் பெரியார் இராமசாமிகள் தோன்றாத காலம்!

ஆகவேதான் அவர்கள் அந்தக் காலத்தை விரும்புகின்றார்கள், இந்தக் காலத்தைப் பழித்துரைக்கின்றார்கள்! அந்தக் காலத்திலே அவர்களுக்கு இருந்த 'பிடி' இந்தக் காலத்திலே இல்லை! அது அவர்களுக்கு எரிச்சலைத் தருகிறது! எரிச்சல், குளத்தங்கரை கான்பரன்சுகளாக உருவெடுக்கிறது சில சமயம்! வைத்தியநாத வேதியர்களின் சட்டசபை இடிமுழக்கங்களாக வெளிவருகிறது சில சமயம்! ஆநந்த விகடன் கல்கி பாரத தேவி தினமணி மித்திரன் ஹிந்து தலையங்கங்களாக புது வடிவம் பெறுகின்றன சில சமயம்! புல் ஏந்தும் கையாலே வாள் ஏந்துவோம் என்று விபரீத சபதம் கூறும் விறுவிறுப்பான நிகழ்ச்சி வடிவம் பெறுகின்றன சில சமயம்! மதுரை மாநாட்டிலே பந்தலை மனம் துணிந்து கொளுத்தியதுபோல, உத்தமர் காந்தி மீது பாழும் துப்பாக்கிக் குண்டுகளைச் செலுத்தியது போல, பாதக நினைப்பும் பெற்றுவிடுகின்றன சிற்சில சமயம்! முன்னாளில் நாட்டிலே தமக்கு இருந்த அபார செல்வாக்கு இந்நாளில் இல்லையே என்பதை எண்ணிப் பார்ப்பதால் அவர்கள் உள்ளத்தில் ஏற்படும் எரிச்சல் எந்த வடிவம் பெற்று வெளிவருகிறது என்பது அது வெளிப்படுகிறபோது உள்ள சூழ்நிலையையும் காலநிலையையும் பொறுத்தது. ஆனால் சூழ்நிலை—காலநிலைகளுக்கேற்ப அதன் வடிவம் மாறுகிறதே தவிர அதன் அடிப்படைத் தன்மை என்றும் மாறுவதே கிடையாது.


**இந்தி எதிர்ப்பாளர் கரத்திலெல்லாம் தவழவேண்டிய நூல்!** ★ **தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய புத்தகம்!**

# தமிழன் தொடுத்த போர்!

அல்லது

## இந்தி எதிர்ப்பு இயக்க வரலாறு

**மா. இளஞ்செழியன் B. A. (HONS)**

தீட்டியது!

★

"இந்தப் புத்தகம், இதைப் படித்துப் பார்க்கிறவர்களுக்கு, இந்தி எதிர்ப்புப் போரைப்போல் உடனே ஒரு போராட்டம் ஏற்படாதா, நமக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்காதா என்கின்ற ஒரு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் உண்டுபண்ணத்தக்கதாக இருக்கிறது. உண்மையைச் சொல்லவேண்டுமானால், எனக்கே, இப்புத்தகத்தைக் கொஞ்சம் பார்த்த அளவிற்கே இந்தி எதிர்ப்புப் போன்றதான—ஏன்—அதைவிட முக்கியமான காரியங்களுக்கும் போராடவேண்டியது இன்றியமையாததாகக் காணப்படும் இக்காலத்தில் நாம் ஏன் சும்மா இருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது."

**—பெரியார்**

"இந்த வரலாற்றினை, என் நண்பர் இளஞ்செழியன், உணர்ச்சி ஊட்டக் கூடிய முறையில் இனிமையும் பயனும் உள்ள முறையில் தீட்டியுள்ளார். இந் நூலின் மூலம் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் நண்பர் நற்றொண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழரின் இல்லந்தோறும் இந் நூல் இருந்து, உள்ளந்தோறும் உணர்ச்சியை ஊட்டி, நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப்போர் புரியும் ஆற்றலைத் தருமாக! தரும்—நிச்சயம்! தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்."

**—அண்ணா**

★


**240 பக்கங்கள்!** **குறைந்த விலை!**

**விலை ரூ 1 12 0** **தபாலில் ரூ 1 14 0**

## பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

இதோ இருக்கிறதே இந்தப்படம் 11—9—48ல் வெளியான "போர்வாள்" இதழிலே வெளிவந்திருக்கிறது. படம் வெளியிடப்பட்டு படத்திற்குப் பக்கத்திலே, பட விளக்கமும் தரப்பட்டிருக்கிறது. டில்லியிலே கவர்னர் ஜெனரலாக சுதந்தரம் வரும் வரை கொலு வீற்றிருந்தவர்கள் வெள்ளையர்கள்! அந்த வெள்ளையர்கள் வெளியேறிய பிறகு, இந்நாள், கவர்னர் ஜெனரலாக இருப்பவர் ஆரியத் தலைவர் ஆச்சாரியார்! சென்னையிலே அதேபோல வெள்ளை கவர்னர்கள் தங்கள் இடத்தைக் காலி செய்ததும் அந்த இடத்திலே வந்து அமர்ந்தவர் வடநாட்டுப் பனியா இனத்தைச் சேர்ந்த ஒரு மகாராஜா! இருந்தால் ஓர் ஆரியத்தலைவர்—இல்லையேல் ஒரு மார்வாரி மன்னர்—இவர்கள்தான் நாடாள வேண்டும் என்ற நிலையிலே இன்றைய சர்க்கார் இருக்கிறதே இது நியாயமா என்று நாம் கேட்டோம். நமது கேள்வியை ஓர் படமாக ஆக்கித் தந்தார் நமது ஓவியர்—அதை, "போர்வாள்", நாட்டிற்கு அளித்தது.




**"டில்லியிலே வேவலும் மவுண்ட்பாட்டனும் வெளியேறியதும் ஒரு பார்ப்பனர் கவர்னர் ஜெனரலாகக் கால் சுழற்றுகிறார்! சென்னையிலே ர் ஆர்தர் ஹோப்புர், பிறகு ஆர்ச்சிபால்ட் நையும் வெளியேறியதும் ஒரு மார்வாடி வர்னராக வலம் வருகிறார். வெள்ளையன் போகிறான் ஆட்சிப் பீடத்தைவிட்டு! ஆனால் பனியாவும் பார்ப்பனரும் டமேறுகின்றனர். பார்ப்பனர்—பனியா கூட்டுச் சதி ரம் ஜோராக நடக்கிறது நாட்டிலே! யார் இருக்கிறார் இந்த அக்கிரமத்தைக் கேட்க? யாருக்கு இருக்கிறது ந்தக் கொடுமையை ஒழித்துக்கட்டும் துணிவு—திராவிடர் கத்தைத் தவிர!"** என்று நாம் படத்தின் அருகே விளக்கம் தந்திருந்தோம்.

அன்று கேட்டோம், இன்றும்தான் கேட்கிறோம், ருக்கு இருக்கிறது இந்தக் கொடுமையை ஒழித்துக் டும் துணிவு திராவிடர் கழகத்தைத் தவிர? காமரா முன் வருகிறாரா இந்தக் கொடுமையை ஒழித்துக் ட! ஓமந்தூரார் துணிந்து வருகிறாரா வடநாட்டுச் ண்டலை எதிர்த்துப் போராட? பக்தவச்சலனா விசுசியாரா கோபால் ரெட்டியாரா யார் வருகிறார் யார் வரத் துணிகிறார்கள், யாரால் வர முடி து இந்த பார்ப்பனர் பனியா சுரண்டலை ஒழித்துக் ட? சோஷலிஸ்டுகள் என்ற பெரிய பட்டத்தைச் டிக்கொண்டுள்ள தென்னாட்டுச் சமதர்ம வாதி த்தான் கேட்கிறோம், அவர்களாவது முன்வந்து ன்னதுண்டா தைரியமாக டில்லி ஏகாதிபத்தியும் ன்னாட்டின் வாழ்க்கையை வதைக்கும் சித்திரவதையை இனி இருக்க விடமாட்டோம் என்று? "சுரண்டல்! அது எங்கே இருந்தாலும் ஒழிப்பது தான் எங்கள் வேலை" என்று அண்டம் அதிர ஆவேசக்குரல் எழுப்பும் மாஸ்கோ பக்தர்களையும்தான் கேட்கிறோம், வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்திய அமைப்பை உடைத்தெறிய அவர்களின் சுண்டுவிரலேனும் அசைந்ததுண்டா இதுவரை? அவர்கள் உழைப்பிலே ஒரு துளி, அவர்கள் பேச்சிலே ஒரு வார்த்தை, அவர்கள் வாழ்க்கையிலே ஒரு கண நேரம், வேகமாக வளர்ந்துவரும் இந்த வடநாட்டு ஏகாதிபத்தியத்தை முறித்துத் தள்ளுவதில் செலவிடப்பட்டிருக்கிறதா? தேசபக்த சிங்கங்களானாலும் சரி, சோஷலிஸ்ட் சிறுத்தைகளானாலும் சரி, அரிவாளையும் சம்மட்டியையும் தம் தோளில் ஏந்திய வண்ணம் பவனி வரும் தென்னாட்டு ஸ்டாலினிஸ்டுகளானாலும் சரி, யார், டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தி இருக்கிறார்கள்? எங்கே உயர்த்தி இருக்கிறார்கள்? எப்படி உயர்த்த முடியும் அவர்களால்? கம்யூனிஸ்டுகளுக்குத் தலைவர் ரணதேவ்—அவர் வடநாட்டுக்காரர் தேசீய வீரர்களுக்குத் தலைவர் நேரு—படேல்—பிரசாத் கோஷ்டியினர்—அவர்கள் வடநாட்டுக்காரர்கள்! சோஷலிஸ்டுகளுக்குத் தலைவர்களோ அச்சுத பட்டவர்த்தன், அஷோக் மேதா, ஜெயப்பிர

காஷ் நாராயண், அருணா அசப் அலி முதலானவர்கள்—அத்தனை பேரும் வடநாட்டுக்காரர்கள். இதனை இல்லை என்று எவர் கூறமுடியும்? ஆம் உண்மை தான் என்று கூறினால், பிறகு, அவர்கள் அந்தந்த கட்சி வட்டாரங்களில் உள்ளவரையில் வடவர் ஆதிக்கத்தை எப்படி அஞ்சாமல் எதிர்க்க முடியும்? ஆகவே தான் நாம் அன்று கூறினோம், இன்றும் கூறுகிறோம், திராவிடர் கழகத்தைத் தவிர, வடநாட்டு ஆதிக்க வாதத்தை எதிர்க்கும் துணிவு வேறு எவருக்கும் இல்லை என்று! தவறு?

தவறு என்கிறது "சுதந்த்ரா"! "சுதந்த்ரா" கூறுவது சரியா?

"சுதந்த்ரா" ஆங்கிலத்திலே வெளிவரும் ஓர் ஆரிய ஏடு! அது, சென்ற மாதம் வெளியான அதன் ஆண்டு மலரிலே, "போர்வாள்" மீது தன் பாணத்தை வீசி இருக்கிறது! மலர், மகிழ்ச்சிகரமான கட்டுரைகளாலே நிறைந்திருக்க வேண்டிய ஓர் புத்தக அமைப்பு. அதிலே பிறர்மீது அம்பு தொடுப்பது முறையல்ல, கண்ணியமுள்ள எந்தக் கனவானும் செய்யத் தகாத காரியம். ஆனால் அந்தக் காரியத்தைத்தான் "சுதந்த்ரா" செய்துகாட்டி இருக்கிறது! என்றாலும் அது பெயர் கண்ணியமுள்ள பத்திரிகை!!

பிரதமர் நேருவின் பிறந்த நாள் விழா சென்ற கிழமை இந்தியா எங்கணும் கொண்டாடப்பட்டுள்ளது. விழாக்களில் கலந்துகொண்ட பலரும் அவருடைய பெருந்தன்மையையும் புனிதமான வாழ்க்கையையும் உயர்ந்த இலட்சியத்தையும் உன்னதமான கோட்பாடுகளையும் பாராட்டிப் பேசினரே தவிர, அவருடைய விழாவை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, மாற்றுக் கட்சியினர்மீது விஷ அம்புகளை வீசினரில்லை. பிறந்த நாள் விழா ஒரு புனிதமான நிகழ்ச்சி. அதிலே பிணக்குக்கும் பூசலுக்கும் உரிய சேதிகளை யாரும் தரமாட்டார்கள். எதிர்க் கட்சிக் கொள்கை கோட்பாடுகளைப்பற்றியோ குற்றம் குறைகளைப் பற்றியோ தவறியும் பேசமாட்டார்கள். அப்படிப் பேசுவது ஒழுங்குமல்ல. பேசினால் அது, விழாவின் புனிதத் தன்மையையும் இன்பச் சூழலையும் கெடுப்பதாகவே முடியும்.

ஒரு பத்திரிகை, மலர் வெளியிடுவது என்பதும், அதுபோன்ற ஓர் புனிதமான சம்பவம். ஆண்டுமலர் என்பது ஏறத்தாழ ஒரு பத்திரிகையின் பிறந்த நாள் விழா போன்றது. அதிலே பகைக் கட்சியினரையோ மாற்றுக் கொள்கையினரையோ தாக்குவது நாகரிகக் குறைவு மட்டுமல்ல காட்டுமிராண்டித் தனத்தின் முதிர்ச்சி!

மலரிலே, விஷம்! சிறிதும் எதிர்பாராதது! இருக்கக் கூடாதது! ஆனால் இருக்கிறது!

சுதந்த்ரா மலரிலே இந்த நஞ்சு தோய்ந்திருப்பது தவறு என்று நாம் கூறுகிறோம் என்றால் அதற்குக் காரணம் அந்த விஷம் தீண்டினால் நம் உடல் துவண்டு போகும் என்ற பயம் அல்ல—நம் உடலையோ உள்ளத்தையோ அணுவளவும் அசைக்க முடியாது அந்த விஷத்தால்—ஏனெனில் நம் உடலிலே ஈரோட்டு இஞ்சக்ஷன் செய்யப்பட்டிருக்கிறது—அந்த இஞ்சக்ஷனுக்கு முன்னாலே இந்த ஆரிய விஷம் பலன்தர முடியாது—ஆனால் நாம் மலரிலே நஞ்சு கலப்பது கூடாதே என்று கூறுவது, மலரின் மணம் குறையக் கூடாது, அது மங்கையர்தம் கருங்கூந்தலை அணிசெய்வதற்குப் பதிலாக சாக்கடையோரம் ஒதுக்கித் தள்ளப்படும் துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகக் கூடாதே என்ற பச்சாத்தாபத்தாலேயே தவிர வேறில்லை.

"மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் இலக்கியத்தின் போக்கு பரந்த உள்ளம் படைத்ததாக இருந்தது. அதன் மனோபாவம் எல்லோரையும் தழுவிச் செல்லும் தன்மையதாக இருந்தது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பரந்த எண்ணமே அதன் அடிப்படையாக இருந்தது. ஆனால் காலம் மாறிவிட்டது. மனோபாவமும் மாறிவிட்டது. இன்றைய தினம் [குறுகிய மனப்போக்குடைய] ஏராளமான தமிழ் வார வெளியீடுகள் உள்ளன. இதோ இந்தக் கார்ட்டூனையும் இந்தப் பட விளக்கத்தையும் கொண்ட பத்திரிகை அதற்கு ஓர் எடுத்துக்காட்டு"

என்று எழுதிவிட்டு, கீழே, நாம், மேலே பொறித்துள்ள படத்தையும் படவிளக்கத்தையும் [முன்னரே போர்வாளில் வெளிவந்ததை] அப்படியே வெளியிட்டிருக்கிறது "சுதந்த்ரா"!

நம்மைக் குறுகிய நோக்கம் படைத்தவர்கள் என்று கூறுகிறது "சுதந்த்ரா!" இது இயற்கை! மஞ்சள் கண் படைத்தவர்களுக்கு உலகமெல்லாம் மஞ்சளாகத்தான் தோன்றும்! "சுதந்த்ரா"வுக்கு மற்ற எல்லா ஏடுகளுமே "சுதந்த்ரா"க்களாகத்தான் தோற்றமளிக்கும். அதில் சிறிதும் வியப்பே இல்லை!

நம் முன்னோர்கள் "**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்ற பரந்த மனப்போக்கு படைத்தவர்களாய் இருந்தனராம். நாம் குறுகிய உள்ளம் கொண்டவர்களாக உருமாறி விட்டோமாம்! கூறுகிறது "சுதந்த்ரா" கூச்சம் சிறிதுமின்றி!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றால் என்ன பொருள்?

நம்மைச் சுரண்டிப் பிழைப்பவர்களைப் போற்றிப் புகழவேண்டும் என்றுபொருள்?

நம் நாட்டின்மீது அரசியல் பொருளியல் அடிமைத் தளைகளைப் பூட்டியுள்ள வடநாட்டு ஆட்சியை வாயார வாழ்த்தி மனமாரப் பாராட்டி மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைக்கவேண்டும் என்று பொருள்?

டில்லி சர்க்கார் ஆதிக்கம் வளர வளர நமது சர்க்கார் ஆதிக்கம் தேயத் தேய, இரண்டையும் பார்த்துக் கொண்டு கைகட்டிக்கொண்டு வாய்மூடி மௌனிகளாக தவம் இருக்கவேண்டும் என்று பொருள்?

பஞ்சாலைகளா—வடக்கேதான்! இரும்புத் தொழிற்சாலைகளா—வடக்கேதான்! மோடார் உற்பத்தியா—வடக்கேதான்! புதை பொருள் ஆராய்ச்சியா—வடக்கேதான்! சர்க்கார் தலைமை நகரமா—வடக்கேதான்! அரசியல் அமைப்பு மன்றமா—வடக்கேதான்! காங்கிரஸ் தலைமைப் பீடமா—வடக்கேதான்! பிரதம மந்திரியா—வடக்கேதான் என்று எதற்கெடுத்தாலும் வடக்கேதான் என்ற நிலை நாட்டிலே இருந்தாலும் "தெற்கே என்ன இருக்கிறது? பசி இருக்கிறது, பட்டினி இருக்கிறது, இரண்டும் தவிர சௌகர்

பேட்டை இருக்கிறது!" என்று சொல்லக்கூடிய பரிதாப நிலையிலே தென்னாடு நிறுத்தப்பட்டிருந்தாலும் இதுபற்றியெல்லாம் ஒன்றுமே பேசக்கூடாது, வாய் திறந்து எவ்வுரையையும் பகரவே கூடாது என்று பொருள்?

என்ன பொருள் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சொற்றொடருக்கு? தெரியுமா "சுதந்திரா"வுக்கு?

எவரிடத்தும் நமக்குப் பகை இல்லை, எவரிடத்தும் நமக்குப் பொச்சரிப்பு இல்லை, எவரையும் நாம் சந்தேகிப்பதில்லை என்றுதான் அதற்குப் பொருளே தவிர நம் காலை வலிய மிதிப்பவரை நாம் வாழ்த்துப் பாடி வரவேற்போம் என்று பொருள்? நம் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் நோக்கும் போக்கும் கொண்டவர்களை நாம் துதிபாடிக் கொண்டாடி துந்துபி முழக்குவோம் என்று பொருள்?

சுதந்த்ரா நம்மைக் குறுகிய புத்தி படைத்தவர்கள் என்று கூறுகிறது!

வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகிறதே இது நியாயமா என்று கேட்கிறோம் நாம். சுதந்த்ராவின் பதில் இது குறுகிய புத்தி என்பது!

வெள்ளையர் வெளியேறியதும் மார்வாடி மன்னர்களும் ஆரியத் தலைவர்களும் மட்டுமே மாறிமாறி ஆட்சிப் பீடம் ஏறுகின்றனரே, இந்த நாட்டுச் சொந்தக்காரர்கள் கதி என்ன என்று ஐயவினா எழுப்புகிறோம் நாம். ஆரிய சுதந்த்ரா நமக்கு அறிவுரை கூறுகிறது பரந்த மனோபாவம் வேண்டும் உங்கட்கு என்று!

பார்ப்பனர்—பனியா கூட்டுச் சதி ஜாம் ஜாமென நடக்கிறதே நாட்டிலே, கேட்பார் இல்லையா இந்த அக்கிரமத்தை என்று நமது ஓவியர் தீட்டிய படம் கேட்கிறது, ஆனால் அந்தப் படத்தைப் பார்த்துப் பதைக்கிறது "சுதந்தரா"வின் நெஞ்சு, ஐயையோ உண்மையை உரைத்துவிடுகின்றனரே இந்த சூனாமானாக்கள் என்று!

ஒழித்துக் கட்டவேண்டும் இந்த அநீதியை என்று முழக்கம் எழுப்புகின்றன நம் வாரத்தாள்கள், ஆஹா! அந்தக் காலமாயிருந்தால் இந்தக் குறுகிய புத்தி இருக்குமா இந்தத் திராவிடருக்கு என்று அந்தக் காலத்தை எண்ணி ஏங்குகிறது சுதந்த்ரா, குளத்தங்கரை குப்பண்ணய்யங்கார் போல!

"காலம் கெட்டுப் போச்சு! குறுகிய புத்தி வளர்ந்து போச்சு! சூனாமானா கும்பல் பெருத்துப் போச்சு! நல்ல காலம் தொலைந்து போச்சு!" என்று முகாரி வாசிக்கிறது சுதந்த்ரா! குப்பண்ணய்யங்காரும் அந்த ராகத்தைத்தான் ஆலாபனை செய்கிறார்! ஒரே ஒரு வேற்றுமை! சுதந்த்ரா மாளிகைவாசியாக இருந்து கொண்டு இந்த மன எரிச்சலைக் கக்குகிறது, குப்பண்ணய்யங்கார்கள் மண் மேட்டிலே அமர்ந்து கொண்டு பேசுகின்றனர்! அது தவிர வேற்றுமை வேறு இல்லை!

அந்தக் காலம் அந்தக் காலம் என்று சுதந்த்ராக்கள் பெருமூச்சுடன் எண்ணிப் பார்க்கிற அந்தக் காலம்—ஆரிய ஆதிக்கம் ஆல் எனத் தழைத்தோங்கி இருந்த அந்தக் காலம்—மன்னாதி மன்னரெல்லாம் பூசாரிகள் அடிதொழுதேத்தி பணிவிடை செய்து, தேவாதி தேவ! வணக்கம் என வந்தனை வழிபாடு புரிந்து கைகட்டி வாய் பொத்தி நின்ற அந்தக் காலம்; தமிழரின் வீரம் ஆரிய சூழ்ச்சியால் மயங்கிக் கிடந்த அந்தக் காலம், அந்தக் காலம் இனி வாராது. அனல் கக்கிகள் ஆவேச நடையிலே ஆணவ வார்த்தைகளை அள்ளி வீசினால் வாராது. நம்மைத் தாக்கினாலும் வாராது, நம்மைத் தாழ்த்தினாலும் வாராது, நம்மைச் சிறையிட்டாலும் வாராது, நம்மைச் சித்திரவதையிட்டாலும் வாராது. ஆரிய மாயையை ஆநந்த கீதம் எனக் கொள்ளும் அருவருக்கத்தக்க நிலை இனி தமிழகத்திற்கு ஒரு போதும் ஏற்படாது. சுதந்த்ராக்களானாலும் சரி குப்பண்ணய்யங்கார்களானாலும் சரி, இதை தம் உள்ளத்தில் நன்கு நிலைநிறுத்திக் கொள்ளட்டும்.

வடநாட்டுச் சுரண்டலை எடுத்துக் காட்டி, இந்த அநீதி தொலையவேண்டும் என்று போராடும் எங்களை குறுகிய உள்ளத்தவர் என்று சிறுமதி கொண்டு சிறு சொல் புகன்றிடும் சின்னத்தனம் கொண்ட சுதந்த்ராக்களே! கேண்மின்! நாங்கள் "குறுகிய" உள்ளம் படைத்தவர்கள்தான்!

எங்களைச் சுரண்டிவாழும் சூதுமார்க்கத்தவரை மாலையிட்டு வரவேற்று அவர்க்கு மண்டியிட்டு வணங்கி ஆர்ட் அட்டையிலே அவர்கள் படத்தை மூன்று கலர் ப்ளாக் எடுத்துப் போடும் "பரந்த உள்ளம்" எங்கட்குக் கிடையாது!

எங்கள் இரத்தத்தை உறிஞ்சி வாழும் அட்டைகளை அணைத்து, "இந்தாருங்கள் தம்பிகளே இன்னும் கொஞ்சம் இரத்தம், பருகுங்கள்" என்று கூறும் "பரந்த உள்ளம்" எங்கட்குக் கிடையாது.

எங்களைக் கடித்துக் கடித்து, அந்தக் கடியின் மூலமாகவே தங்கள் சதைகளைப் பெருக்கிக்கொள்ளும் மூட்டைப் பூச்சிகளை முத்தம் கொடுத்து, வாழ்வதற்கு மூலை தேடிக்கொடுத்து, தேச பக்த சிங்கங்காள் நீவிர் வாழ்க வாழ்க எனப் புகலும் அளவுக்குப் "பரந்த உள்ளம்" நிச்சயமாக எங்கட்குக் கிடையாது.

எங்கள் குருதி குடித்துத் தம் குடலை வளர்க்கும் ஓநாய்க் கூட்டத்தை ஓ எம் உத்தமர்களே! உன்னத இலட்சிய சொரூபிகளே வாரும், வாரும் என வாழ்த்துப் பாடி விதவிதமான வரவேற்பளித்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அருமையானதோர் வாசகத்தை அர்த்தமற்ற சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும் "பெருந்தன்மையான" உள்ளம் எங்கட்குக் கிடையாது.

கால் ஒன்று உதைக்க உதைக்க அந்தக் காலுக்கு நிமிர்ந்து நிமிர்ந்து முத்தம் கொடுக்கும் மிகப் பரந்த மனோபாவம் எங்கட்குக் கிடையாது.

**சுதந்த்ராக்களே! உங்கட்கு இருக்கலாம் அந்தப் பரந்த மனோபாவம்! எங்கட்கில்லை! எங்கட்கு அது தேவையுமில்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொன்மொழிக்குப் பொருளும் அது அல்ல! தமிழன் பாரையும் தாழ்த்தான்! ஆனால் அதே நேரத்தில் தமிழன் பாருக்கும் தாழான்—! ஆம்! அதுதான் அந்த முதுரையின் முழுப் பொருள்—உண்மைப் பொருள்!**

—

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வதைத் தயவுசெய்து கேட்க வேண்டும்......"

"சரி கேட்கிறேன்! பீடிகையை நீட்டாமல், செய்தியை மட்டும் விரைவாகக் கூறு! இரவிற்கு முன் நகர் போய்ச் சேரவேண்டும்." என்று இன்ஸ்பெக்டர் இயம்பியதும், காளிமுத்து தன் உள்ளத்தில் அடைத்துவைத்திருந்ததை வெளியில் கொட்டலானான்.

"நான் ஜமீன்தாரின் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தேன். கோட்டீஸ்வர அய்யர் கணக்கெழுதும் வேலைக்கு அங்கு வந்து சேர்ந்தார். அய்யர் நாளுக்கு நாள் ஜமீன்தாரரைத் தன் வசப்படுத்திக்கொண்டு வந்தார். பலவித ஆசைகளைத் தூண்டி, அதி விரைவில் அய்யர், தன்வலையில் ஜமீன்தாரரை சிக்கவைத்து விட்டார். என்னிடத்திலும், அய்யர் அன்பாகவே நடந்துவந்தார். எனக்குத் தேவையான நேரங்களில் எல்லாம் பண உதவி அளித்தும்வந்தார்...ஒரு நாள் அய்யர் தனியாகக் கூப்பிட்டு ஒரு ரகசியத்தைத் தெரிவித்தார். சோலையூரிலிருக்கும் சிவனைக் கொலை செய்யவேண்டுமென்றும், அதற்கு வெகுமதியாக நூறு ரூபாய் எனக்களிப்பதாகவும் கூறி, அவர் சத்தியம் செய்தார். வறுமையில் வதைந்து கொண்டிருந்த நான் பணத்தாசையினால் கொலைகாரனாக மாறவும் துணிந்தேன். எனினும் சிவனைக் கொலைசெய்ய முடியாமல் போயிற்று, வேறொருவன் அங்கு வந்துவிட்டதனால்! பிறகுஅய்யர் முன்னைவிட அதிக அன்பாக இருப்பவரைப் போல் நடித்தார் என்பது பிறகுதான் தெரிந்துகொண்டேன். அப்பொழுது உண்மையாகவேதான் என்மீது அன்புகொண்டுள்ளார் என்றெண்ணி மகிழ்ந்து, அவருக்காக எதனையும் செய்யத் தயாராக இருந்தேன்......ஊரில் "உரிமைப் போராட்டம்" ஆரம்பமாகப்போகிறதென்று செய்தி கிடைத்தது. அன்று அய்யர் தன் வீட்டில் எனக்குச் சுவையான சாப்பாடு போட்டார். இரவு என்னை தன் வீட்டிலேயே தங்கும்படியும் கேட்டுக்கொண்டார். எனக்குப் பரம சந்தோஷமாகிவிட்டது அந்நேரத்தில்! அவ்விதமே நான் செய்தேன்........... அய்யர், "காளிமுத்து, ஒரு பெரிய காரியம் உன்னால் ஆகவேண்டியிருக்கிறது. அதனை நாம் செய்து முடித்துவிட்டால், நாளைய தினத்திலிருந்து பணக்காரர்கள் தாம்" என்று கூறினார். என்னவென்று கேட்டேன். மக்கள் கிளர்ச்சி செய்யும் நேரத்தில் துணிந்து ஜமீன்தாரைக் கொலை செய்துவிட வேண்டுமென்றும், பழி யார் மேலாகிலும் போய்விடுமென்றும் தெரிவித்தார். அவர் கூறியதைக் கேட்டதும் எனக்குத் துக்கிவாரிப் போட்டது. என் குடும்பத்தைக் காப்பாற்றி வருபவரையா கொலை செய்வது? என்னை தன் உண்மையான உடற்காவலனாக நம்பிக் கொண்டிருக்கும் ஜமீன்தாருக்கா துரோகம் செய்வது? என்றெண்ணினேன்; சேச்சே ஒருக்காலும் நாம் இதற்கு இணங்கவே கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு அய்யரைப் பார்த்து, "இதனைத் தவிர வேறெது தாங்கள் கூறினாலும் செய்ய நான் சித்தமாக இருக்கிறேன்" என்று சொன்னேன். அய்யர் எப்படியெப்படியோ சாகச வார்த்தைகளைச் சொல்லிப்பார்த்தார், கடைசிவரைக்கும் நான் ஒத்துக்கொள்ளவே இல்லை. அய்யரும் அந்த யோசனையை அத்துடன் விட்டுவிட்டார்.........

"ஊரில் மக்களின் உரிமைப் போராட்டம் நடக்கத் தொடங்கியது. ஜமீன்தார், என்னை சுற்றுப்புற ஊர்களிலிருந்து குண்டர்களை விரைவாக அழைத்துக் கொண்டு வரும்படி பணம் தந்தார். அவ்விதமே நான் செய்தேன். வந்த குண்டர்களுடன் சேர்ந்துகொண்டு நானும் கிளர்ச்சிக்காரர்களைத் தாக்கினேன்... ......ஜமீன்தார் அறையிலிருந்து ஒரு சிறிய மூட்டையுடன் அய்யர் வெளியே வந்தார். வந்தவர் என்னை ரகசியமாக அழைத்தார். தனியான இடத்திற்குச் சென்றோம். தன் கையிலிருந்த மூட்டையை அவிழ்த்துக் காட்டினார். ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன! அவ்வளவும் வைர நகைகள்! எப்படி எடுத்துக் கொண்டு வந்துவிட்டீர் என்று நான் கேட்டேன். அய்யர் சிரித்துவிட்டு, "நானா எடுத்துக்கொண்டு வந்தேன், அந்த முட்டாளே என்னிடம் தந்தான், பத்திரப்படுத்தி வைக்கும்படி" என்று கூறினார்.

'இதுதான் தக்க சமயம்! அவனைக் கொலை செய்துவிட்டால், இவ்வளவு நகைகளும் நமக்கே சொந்தமாகிவிடும். இன்னும் அதிகமான பணத்தையும் கொள்ளை அடித்துவிடலாம்" என்று பேராசைபிடித்த அவன் கூறினான். முடியவே முடியாது என்று மறுத்துவிட்டேன். என்னிடமிருந்த கத்தியை வாங்கிக்கொண்டு, "இந்த நகைகளைப் பத்திரமாகக் கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போ! விஷயத்தை நானே முடித்துவிட்டு விரைவாக அங்குவந்து சேர்கிறேன்" என்று சொல்லிவிட்டு அய்யர் ஜமீன்தாரின் அறையினுள் நுழைந்தார். நான் மூட்டையை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றேன். அய்யரின் கைவாளுக்கு ஜமீன்தார் பலியானார்... ......" என்று கூறி காளிமுத்து பெருமூச்சுவிட்டான். அவன் கண்களில் நீர்த்துளிகள் புறப்பட்டன.

"பார்ப்பனன் ஒருவனுக்குக் கொலை செய்யும் மன தைரியமிருக்கிறதா?......" என்று பூர்ணலிங்கம் கேட்டு முடிப்பதற்குள் "உலகப் பெரியார் காந்தியின் உயிரைக் குடித்தது யார் என்பதை மறந்துவிட்டீரோ?" என்று காளிமுத்து கூறினான்.

"ஆமாம்! ஆமாம்! உண்மைதான்!" என்று இன்ஸ்பெக்டர் கூறினார்.

"குமாரும் கோபாலும் ஜமீன்தாரைக் கொலை செய்துவிட்டார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. நகைகள் அவ்வளவையும் அய்யரே எடுத்


## மூல வியாதிகளுக்கு

"யௌவன பிராஷ்"

**(கருணைக் கிழங்கு லேகியம்)**

ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம். 12 நாள் யௌவன பிராஷ் ரூ 3. 12 நாள் நாகபஸ்பம் ரூ. 2.

**சரஸ்வதி வைத்தியசாலை**

பழனி S. I.

துக்கொண்டு கொஞ்சம் பணம் மட்டும் எனக்குக் கொடுத்தார்...... ...அந்தப் பணமும் கரைந்துவிட்டது. அடிக்கடி நான் அய்யரைப் பணம் கேட்டுக்கொண்டிருந்தேன். அவரும் தந்து கொண்டுதான் வந்தார். இதற்கிடையில் பழத்தூரில் ஒரு கல்யாணம் நடந்தது!''.

''யாருக்கு?''

''சோலையூரைச் சேர்ந்த சிவனின் நண்பன் கண்ணன் என்பவருக்கு. எங்களூரில் பெண் கட்டிக்கொண்ட பிறகு கண்ணன் பழந்தூரிலேயே வந்து தங்கிவிட்டார். அவர் சுயமரியாதைச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதில் பல இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு அடிக்கடி கூட்டங்கள் போட்டு சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார். அடிக்கடி அக் கூட்டங்களுக்கு நான் சென்றுகொண்டிருந்ததினால் நாளாவட்டத்தில் என்னையும் அறியாமல் அச்சங்கத்தினிடத்தில் ஓர் வித பற்றுதல் எனக்கேற்பட்டுவிட்டது. சில மாதங்களில் அச்சங்கத்தின் உறுப்பினனாகச் சேர்ந்தேன். அதன் பிறகு அய்யரிடத்தில் எனக்கு வெறுப்பேற்பட்டுவந்தது. அவரும் என்னை ஒரு விதமாகப் பார்க்க ஆரம்பித்தார்...அச்சங்கத்தில் சேர்வதற்கு முன்னர் எனக்குச் சரியாகவே பேசத் தெரியாது. பேசினாலும் கொச்சையாகத்தானிருக்கும்......ஜமீன்தாரிடமிருந்து கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு அய்யர் ஊரில் பெரிய தனிதராகி விட்டார். ஜமீன்தார் இறந்துவிட்ட பிறகு அவருக்கு வார்சு யாருமில்லாதபடியினால், கலெக்டர் அதிகாரத்தின் கீழ் எங்கள் ஊர் வந்துவிட்டது. அதனால் ஏழை விவசாயிகளின் குறைகளில் பெரும்பகுதி தீர்ந்துவிட்டதென்றே சொல்லலாம்......கண்ணன் எழுப்பிய சுயமரியாதைச் சூறாவளி தன் உயரிய அந்தஸ்தை ஆட்டம் கொடுக்கச் செய்துவிடுமோ என்று அய்யர் அஞ்சினார். ஆகவே கண்ணனிடத்தில் அடிக்கடி சென்று அவரை வலையில் வீழ்த்த முயன்றார். முடியவில்லை. கடைசியில் ஒரு ஆசையை எழுப்பினார். அதனால் அய்யரைக் குறித்தும் அவர் மகளைக் குறித்தும் கூட்டங்களில் ஒன்றும் கூறுவதில்லை என்று கண்ணன் சத்தியம் செய்துகொடுத்தாராம். அந்த ஆசை பூர்த்தியாக வேண்டித்தான் நான் இப்பொழுது கைது செய்யப்பட்டிருப்பது..''

''ஒன்றும் புரியவில்லையே! விளக்கமாகக் கூறு'' என்று பூர்ணலிங்கம் கேட்க அந்தக் குரலில் ஏதோ ஒருவித மாற்றம் ஏற்பட்டிருப்பதை நுணுக்கமாகக் காளிமுத்து அறிந்துகொண்டு விவரமாகக் கூறத்தொடங்கினான்.

(தொடரும்)


வெளிவந்துவிட்டன!

**பாசறையின் புது நூல்கள்!**

ந. சி. கந்தையா தீட்டிய

**திராவிடம் என்றால் என்ன** 0 6 0

**ஆரியத்தால் விளைந்த கேடு** 0 6 0

தனித்தனி தபாற் செலவு 0 1 0

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு,
சென்னை.


(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் அகராதிப்படி இன்னமும் அழைத்து வருவது தவறு—மகிழ்ச்சியோடு இந்திய யூனியனில் இருக்கும். ''நாமாக விரும்பினோம் ஒன்றாக இருக்க! ஆகவே ஒரே மத்திய சர்க்கார் என்ற பாசத்தால் பிணைப்புண்டு இருக்கிறோம்! இது பாசக்கயிறு அல்ல கழுத்துக்குச் சுருக்குக் கயிறு என்று என்றேனும் தோன்றினால் நாம் தாராளமாக இந்த மத்திய சர்க்காரிலிருந்து வெளியேறிவிடலாம், சட்டப்படி நமக்கு அந்த உரிமை உண்டு'' என்று ஒவ்வொரு நாடும்—இப்போதைய அகராதிப்படி, ஒவ்வொரு மாகாணமும்—எண்ணும் விதத்தில் இந்திய அரசியல் சட்டம் இருக்க வேண்டும். ஆனால் இப்போது வகுக்கப்பட்டுள்ள அரசியல் திட்டம் அப்படி இருக்கிறதா? **இல்லை!**

இந்த திட்டப்படி எந்த மாகாணமேனும்—எடுத்துக்காட்டாக திராவிடநாடு—மத்திய சர்க்காரைவிட்டுப் பிரிந்துபோக முடியுமா? **முடியாது!**

ஆகவே இத்திட்டப்படி மாகாணங்களுக்கு சுய நிர்ணய உரிமை—தங்கள் தலை எழுத்தை தாங்களே முடிவு கட்டிக் கொள்ளும் பிறப்புரிமை இல்லை என்று தானே பொருள்? **ஆம்!**

அப்படியானால், இந்தத் திட்டம், ஏற்கெனவே உருவாகி உருவாகி வளர்ந்து வருகின்ற வடநாட்டு ஏகாதிபத்தியத்தை என்றென்றும் நிலைக்க வைப்பதற்கான சூழ்ச்சிகரமானதோர் சுரண்டல் கருவி என்றல்லவா ஆகிறது?

**ஆம்! நிச்சயமாக அப்படித்தான் ஆகிறது!**

அப்படியானால் பேரறிஞர் அம்பேத்கார் எப்படி இத்தகைய படுமோசமான, பயங்கரமான ஏகாதிபத்திய அரிச்சுவடி எனத்தகும் திட்டத்தை உருவாக்க ஒப்புக்கொண்டார்?

**நமக்குத் தெரியவில்லை! நம்மால் இதைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை!**

இந்தியத் துணைக்கண்டமே! உன் எதிர்காலம் மிகவும் இருண்டு கிடக்கிறது! அறிஞர் அம்பேத்கார் தயாரித்துள்ள அரசியல் அவியல் இதைத்தான் நன்கு புலப்படுத்துகிறது!

—


# பெண்களைப் பற்றி!

| | |
|---|---|
| பெண்கள் போராட்டம் | 0 6 |
| பெண்ணே பெரியவள் | 0 8 |
| பெண்கள் உலகம் | 0 12 |
| பெண்களிடம் ஏன் இந்த மோகம் | 0 3 |
| பெண்களோடு வாழ்வதெப்படி | 0 3 |
| பெண்களும் சமூகமும் | 0 8 |
| புரட்சிப் பெண் | 0 8 |

தபாற் செலவு தனித்தனி 0 1 0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.




தொடர்கதை:

இருபத்தோராவது பகுதி
**திரை விலகியது.**

பழத்தூரில் காளிமுத்துவின் சிறிய குடிசையினுள் போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கமும் நான்கு போலீஸ்காரர்களும் நுழைந்தார்கள். அந்நேரத்தில் வெங்காயத்தைக் கடித்துக் கொண்டு சிறிய மொந்தையில் காளிமுத்து கஞ்சி குடித்துக்கொண்டிருந்தான். போலீஸ்காரர்கள் வருவதைக் கண்டதும் கூழ்மொந்தையைக் கீழே வைத்துவிட்டு, அவன் எழுந்து நின்றான். தன்னைத் தேடிக் கொண்டு போலீசார் வந்திருப்பதின் காரணம் புரியாமல் விழிக்க விழிக்க அவர்களைப் பார்த்தான் காளிமுத்து!

"நீதானே காளிமுத்து?" என்று அதிகாரமும் அதட்டலும் கலந்த குரலில் பூர்ணலிங்கம் கேட்டார்.

அடக்கமான முறையில் "ஆமாம்" என்று காளிமுத்து பதிலளித்தான்.

"நீ கைது செய்யப்பட்டிருக்கிறாய்!" என்று இன்ஸ்பெக்டர் சொன்னதும், ஒரு போலீஸ்காரன் காளிமுத்துவின் அருகில் சென்றான்,

"எதற்காக?" என்று வினவிக் கொண்டே விலங்கைப் பூட்டிக் கொள்ள தயக்கத்தோடு தன் கைகளை நீட்டினான் காளிமுத்து!

"ஜமீன்தாரைக் கொலைசெய்ததற்காக" என்று பூர்ணலிங்கம் சொல்லிமுடிப்பதற்கும், போலீஸ்காரன் காளிமுத்துவின் கைகளில் விலங்கைப் பூட்டிமுடிப்பதற்கும் சரியாக இருந்தது.

இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் காளி முத்துவை ஏற்றிக்கொண்டு பழத்தூரை விட்டு, பூர்ணலிங்கம் புறப்பட்டார். மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகள் "கல கல" வென ஒலித்தன! காற்குளம்புகளிலிருந்து மண் தூசி புகைபோல் புறப்பட்டது! சக்கரங்கள் அச்சாணிகளில் உராய்ந்து உராய்ந்து "கிரீச் கிரீச்" என்று சப்தம் செய்தன. "போலீஸ் ஐயா" உட்கார்ந்து வருகிறார் என்ற பயத்தில் வண்டிக்காரனும் மாடுகளை அதட்டியும் அடித்தும் வேகமாகப் போகும்படித் தூண்டினான்.

உண்மையான கொலைகாரனைப் பிடித்து விட்டோம் என்ற உற்சாகத்தினால் ஒன்றன்பின் ஒன்றாக சிகிரேட்டை ஊதிக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர், அவர் கண்களில் வெற்றியின் ஒளி பிரகாசித்தது.

பக்த சிரோன்மணிகள் விழுந்து விழுந்து எழுவதினால் கலங்கி சேரும் மாமாங்க குளத்தைப் போல, காளிமுத்துவின் உள்ளமும் குழம்பி இருந்தது. அவன் மனதில் எவ்வளவோ நினைவுகள் தோன்றித் தோன்றி மறைந்தன. உண்மையை இனி உரைத்தால் பயன் ஏற்படுமா என்ற ஐயம் அவனுக்கேற்பட்டது. "பயன் ஏற்படுமோ ஏற்படாதோ அதைக் குறித்துக் கவலை இல்லை. உண்மையைச் சொல்லிவிடுவோம், அதுபோதும் நம் மனத்திருப்திக்கு!" என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான். இன்ஸ்பெக்டரைப் பார்த்து தைரியத்தோடு பேசஆரம்பித்தான்.

"ஐயா! நான் தங்களிடம் சிறிதுநேரம் பேசவேண்டும்!"

"எதற்காக?"

"உண்மையைத் தாங்கள் அறிவதற்காக!"

"தாராளமாகப் பேசிக் கொண்டு வா!"

"வண்டியில் பிறர் இருப்பதனால் தனியான இடத்தில்தான் என் மனதில் உள்ளதைக் கூற முடியும்"

"ஓடித் தப்பித்துக்கொள்ள உத்தேசமா?"

"இல்லவே இல்லை! என் குழந்தைகளின்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன் அந்த எண்ணமே எனக்கில்லை. என் கைகளில் விலங்கு இருக்கிறது. மற்ற போலீஸ்காரர்களுடனே ஒரு தனியான இடத்திற்குச் செல்லலாம். என் கால்களையும் விலங்குகளினால் பிணைத்துவிடும்படி கட்டளை இடுங்கள். பிறகு போலீஸ்காரர்கள் அவ்விதமே செய்துவிட்டு, அவர்கள் சிறிது தூரத்தில் நாலாபுறங்களிலும் நிற்கட்டும். அதன் பிறகு என் மனதிலுள்ளதைச் சொல்கிறேன். விருப்பந்தானா ஐயா? தங்களை வேண்டிக்கொள்கிறேன், எனக்கு இந்த வசதியை மட்டும் அளியுங்கள்..."

"சரி" என்று பூர்ணலிங்கம் கூறினார். காளிமுத்து சொல்லிய வண்ணமே, கால்களுக்கு விலங்கிடுவது தவிர்த்து மற்றவையாவும் செய்யப்பட்டன.

ஒரு பெரிய கல்லின்மீது பூர்ணலிங்கமும், அவர் காலடியில் புல்தரையில் காளிமுத்துவும் உட்கார்ந்தார்கள்.

"என்னைப்பற்றி தங்கள் உள்ளத்தில் முன்னரே உருவாகி இருக்கும் அபிப்பிராயத்தை ஒருபுறமாக ஒதுக்கிவிட்டு, நான் சொல்லப்போ

(10-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)